
சம்பூரண மழையைப்
பெய்யப்பண்ணினீர்
You Sent Abundant Rain

68 சங்கீதம்

சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர்
இளைத்துப்போன உம் சுதந்தரத்தைத் திடப்படுத்தினீர்
உம்முடைய மந்தைகளை அதில் தங்கச் செய்தீர்
உம்முடைய தயவினாலே ஏழைகளைப் பராமரிக்கிறீர்

ஆண்டவரே வசனத்தைத் தந்தீர் - அதைப்
பிரசித்தப்படுத்தும் கூட்டமோ மிகுதி
ஆதிமுதலாய் வானங்களின் மேல் ஏறியிருக்கிறீர்
தேவனுடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துவோம்

தேவரீர் உன்னதத்திற்கு ஏறினீர்
சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர்
மனுஷருக்குள் வாசம்பண்ணவும் தெய்வமாம்
கர்த்தருடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துவோம்

பரிசுத்தரே நீர் பயங்கரமாய் விளங்குகிறீர் - உம்
ஜனங்களுக்கு பெலனையும் சத்துவத்தையும் அருள்கிறீர்
இரட்சிப்பை தருகின்ற தேவனாம்
சுவாமியின் வல்லமையைப் பிரசித்தப்படுத்துவோம்

சர்வவல்லவரே ராஜாக்களைச் சிதறடித்தீர்
சேனைகளின் ராஜாக்களைத் துரத்தினீர் ஓடச்செய்தீர்
தேவபர்வதம் பாசான் பர்வதம் போலானது
உயர்ந்தவரின் வல்லமையைப் பிரசித்தப்படுத்துவோம்

கடவுளே உம் ஜனத்தின் முன்னே நடந்தீர்
பூமி அதிர்ந்தது வானமும் பொழிந்தது
சீனாய் மலையும் உமக்கு முன்பாய் அசைந்துபோனது
சர்வசிருஷ்டிகரின் வல்லமையைப் பிரசித்தப்படுத்துவோம்